வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் CC . No. 299/2022

வழக்கு சாட்சி – PW 8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. உலகநாதன் | தொழில் | :: |
| த/பெ பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 17.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 03.30 மணி)

நான் தற்போது இராமநாதபுரம், பி1 நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 14.06.2020ம் தேதி தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது தேவிப்பட்டின காவல்நிலைய விபத்து வழக்கில் இறந்துபோன இராஜாமுகைதீன் என்பவரது பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி காலை 08.00 மணிக்கு கடவுச்சீட்டை பெற்று இராமநாதபுரம் மாவட்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று வேண்டுகோள் கடிதத்தினை மருத்துவரிடம் சமர்பித்து பிரேதத்தினை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை அவரது மகனிடன் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் எனக்கு எந்த பணி அலுவலும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.09.17 17:31:13 +0530

சொன்னதுபோல் இந்த வழக்கு சம்பந்தமாக பிரேத அலுவல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் பிரேதத்தை அடையாளம் காண்பித்து மருத்துவரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், பிரேத பரிசோதனைக்கு பிறகு அவரது உறவினரிடமும் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அன்றைய தினமே என்னை ஆய்வாளர் விசாரித்தார். மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். வழக்கு சம்பந்தமாக நான் எந்த அலுவலும் செய்யவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.09.17 17:31:23 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.